# IN THE COURT OF THE SUBORDINATE JUDGE AT AMBATTUR

**MCOP No.77/2023** **PW1**

| | | |
|---|---|---|
| Name | : | மைனர் V கன்னியப்பன் அவருடைய பாதுகாவலர் தாயார் V.சுகுணா |
| Father's/Husband's Name | : | G விக்னேஷ் |
| Address | : | நெம்பர்.3, ஏரிக்கரைத் தெரு, எஸ்.எம்.நகர், பூம்பொழில் நகர், வெள்ளானூர், திருவள்ளூர் 600 621. |
| Age | : | 25 |

10.08.2026 மேற்குறிப்பிட்ட சாட்சியாகிய PW1ன் வாக்குமூலம் 1969ம் ஆண்டு 44வது பிரிவின் கீழ் திரு.G.சிவக்குமார், M.L., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிடப்பட்டு உறுதி கூறப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்படுகிறது.

குறுக்கு விசாரணை

1. விபத்தை நான் நேரில் பார்த்தேன். இருசக்கர வாகனத்தை என் மகன் பிடித்து கொண்டிருந்ததை கவனிக்காமல் அதன் ஓட்டுநர் திடீரென்று எடுத்ததால் அந்த விபத்து ஏற்பட்டது. நான் குழந்தையை சரியாக பார்த்து கொள்ளாமல் அஜாக்கிரதையாக இருந்ததால் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல.

2. விபத்து நடக்கும் போது என் மகனுக்கு 2 1/2 வயது. தற்போது 3 ஆம் வகுப்பு படிக்கிறார். அதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன். குழந்தை மாற்றுத்திறன் உடையது ஆகும். விபத்து ஏற்பட்ட உடன் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோமா என்றால் உடனே மருத்துவமனைக்கு சென்றோம். அன்று இரவு புகார் கொடுத்தோம்.

3. எதற்காக போலீசார் பிரிவு மாற்றம் செய்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. வண்டியின் ஓட்டுநர் எனக்கு தெரிந்தவர் என்று சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. அந்த இரண்டு சக்கர வாகனம் எனது வீட்டின் வாசல் அருகே தான் நின்றது.

4. எனது அஜாக்கிரதையால் காயம் ஏற்பட்டது என்றும், அதனால் எதிர்மனுதாரர் இழப்பீடு தர வேண்டியதில்லை என்றும், நான் கோரியுள்ள இழப்பீடு அதிகம் என்றும் சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.